1981 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சுண்டல், முறுக்கு என்று சொல்வதில்லை. தேங்காய், மாங்காய், பட்டாணி சுண்டல் என்று சொல்வதுதான் வழக்கம். கடற்கரையில் வியாபாரம் செய்கிறார்கள். 'அன்-ஆர்கனைஸ்டு லேபரர்ஸ்'. ஆர்கனிசேஷனில் வராத தொழிலாளர் களுக்கு சட்டம் கொண்டு வருவதாக இந்த அரசு இருக்கிறது. அதில் இவர்கள் வருவார்களா என்பது பரிசீலனை செய்யப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே லட்சக்கணக்கான கடைகளிலே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதுபோல் குறைந்தபட்ச சம்பளம் பெறமுடியாமல் வேலை செய்கிறார்கள். லேபர் இன்ஸ்பெக்டர்கள் வருகிற நேரத்திலே அந்தத் தொழிலாளர்களை வெளியே அனுப்பிவிடுகிறார்கள். சில விவரம் தெரிந்தவர்கள் —நான் எல்லோரையும் சொல்லவில்லை—சில லேபர் இன்ஸ்பெக்டர்களுக்கு அல்வா, சொச்சி வாங்கிக் கொடுத்து தன்னைக் கட்டி விடுகிறார்கள். இதை யெல்லாம் தடுத்து நிறுத்துவதற்கு எல்லாக் கடைகளிலும் உள்ள தொழிலாளர் களைப் பதிவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த பட்ச ஊதியம் என்பது 2—10—1980 முதல் அமலுக்கு வந்திருக்கிறது. அதை உன்னிப்பாக அரசு கவனித்துக் கொண்டு வருகிறது. அல்வா, சொச்சி வாங்கிக் கொடுப்பதற்கு சிலர் முயற்சி செய்தும் அந்த அதிகாரிகள் அதை வாங்காமல் நேர்மையாக நாணயமாகப் பணியாற்றி யிருக்கிறார்கள் என்று தான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா 899 உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகிறது.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள்.

* 900 வினா.—திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை ஒவ்வொரு வட்டத்திலும் அமைப்பது என்ற அரசின் திட்டத்தை நிறைவேற்ற எடுக்கப் பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன?

(ஆ) குளித்தலை வட்டத்திற்கு தனியாக சங்கம் அமைக்கக் கோரி முறையீடு வந்துள்ளதா?

(இ) இது எப்பொழுது அமைக்கப்படும்?

[1981 ஏப்ரல் 27

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கிராமப்புற கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களை ஒவ்வொரு வட்டத்திலும் அமைப்பது என்ற திட்டத்தின் அடிப்படையில், வட்ட மற்றும் கோட்ட அளவிலான 100 கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள், எற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. தேவைக்கு எற்றவாறு மேலும் சில புதிய சங்கங்களை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) மற்றும் (இ) குளித்தலை வட்டத்திற்கு தனியாக சங்கம் அமைக்க கோரி ஒரு முறையீடு அரசுக்கு கிடைக்கப்பெற்று, அது பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வட்ட அளவில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது என்பது அவசியமெனக் கருதித் தான் அதை கொள்கையளவிலே அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதுபற்றி உடனடியாக அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் வீட்டு வசதித் துறைச் செயலர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாநிலத்துள்ள "ஒவ்வொரு வட்டத்திற்கும் ஒரு கிராம கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்" அமைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கான தக்க செயற்குறிப்புகளை அரசின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்குமாறு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அவ்வாறே கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் புதிதாக 28 சங்கங்களை அமைக்க ஒரு செயற்குறிப்பை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பிவைத்துள்ளார். இதில் குளித்தலை வட்டமும் இடம் பெறுகிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு ஒரு சங்கம் என்ற முறையை விட்டு, 2 பஞ்சாயத்துக்களுக்கு ஒரு சங்கம் என்ற முறையிலே அந்தச் சங்கங்களை அமல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 100 சங்கங்களை 128 சங்கங்களாக ஆக்கியிருக்கிறோம். இதைச் செய்து பார்ப்போம். மேலும் தேவையென்றால் அரசு பரிசீலித்துப் பார்க்கும்.